பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 23 திங்கட்கிழமை 06.06.2022 கதிர் 105

## சிறிபால, அமரவீரவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை 'அவுட்'

கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த முடிவை மீறி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார் எனதெரிய வருகின்றது.

☞2

## சீமெந்து மூடை விலை 4,000 ரூபாவை எட்டும்



எதிர்காலத்தில் சீமெந்து மூடை ஒன்றின் விலை 4,000 ரூபாயை தாண்டும் என தேசிய கட்டுமான சங்கம் தெரிவித்துள்ளது.

வரி அதிகரிப்புடன் சீமெந்து விலையும் அதிகரிக்கும் என அச்சங்கத்தின்தலைவர்சுசந்தலியனாராச்சிதெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சீமெந்து மூட்டை ஒன்றின் விலை 3,000 ரூபாயை அண்மித்துள்ளதாகவும் தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் வரி அதிகரிப்பினால் சீமெந்து விலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

## ரஷ்ய விமான சேவை தடை இடைநிறுத்தம்!




ரஷ்யாவின் ஏரோப்ளோட் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்று இலங்கையிலிருந்து வெளியேறுவதற்குத் தடை விதித்து பிறப்பித்த உத்தரவை கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் இன்று இடைநிறுத்தியது.

☞2

## '20' பெரும் சாபக்கேடு!

# நாட்டுக்காக 21ஐ ஆதரிக்க திகாம்பரம் எம்.பி. அழைப்பு



அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம்தான் இந்த நாட்டுக்குப் பெரும் சாபக்கேடாக அமைந்தது. எனவே, ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி, நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களைப் பகிரும் 21ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாம் ஆதரிப்போம்.

- இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

☞2

## ஈழத்தமிழர்களை விடுவிக்க உடன் நடவடிக்கை வேண்டும்

### தமிழக முதல்வரிடம் கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை



(இ.கலையமுதன்)

தமிழகத்தின் சிறப்பு முகாம்களின் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்ற தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

☞2

## கோட்டாபய - 'மொட்டு' இன்று முக்கிய பேச்சு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் இன்றிரவு நடைபெறவுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் முடிவடைந்த கையோடு இந்தக் கூட்டம் இடம்பெறும் எனத் தெரிய வருகின்றது.

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

21ஆவது திருத்தச்

☞2

## தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு உதயம்



(இ.கலையமுதன்)

அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு இன்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்ற நிகழ்வின் போதே இந்தக் கூட்டமைப்பு

☞2

## போதைப்பொருள் விற்பனை: 12 பேர் வசமாக சிக்கினார்கள்

கண்டி, நாவலப்பிட்டி நகரில் மிக நீண்டகாலமாகப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டி பொலிஸார், கம்பளைப் பொலிஸார் மற்றும் கம்பளை போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையிலேயே குறித்த 12 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் பிரதான சந்தேகநபர் ஒருவரும், ஏனைய 11 பேரும் போதைப்பொருள் விற்பனை பிரதிநிதிகள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களைக் கைதுசெய்த போது, அவர்களிடமிருந்து

☞2

### வர்த்தகரிடம் கப்பம் பெற்ற வழக்கில்

## அமைச்சர் பிரசன்னவுக்கு இரு வருடக் கடூழியச் சிறை



வர்த்தகர் ஒருவரிடமிருந்து 6 கோடி 40 இலட்சம் ரூபா கப்பம் பெற்ற குற்றச்சாட்டில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இன்று உத்தரவிட்டுள்ளார்.

வர்த்தகர் ஒருவரிடமிருந்து 6 கோடி 40 இலட்சம் ரூபா கப்பம் பெற்ற சம்பவம் தொடர்பில் உறுதிமொழிப் பத்திரத்தில்

☞2

## ஆயுதத்துடன் வந்தவர்களால் எனது உயிருக்கு அச்சுறுத்தல்

### மனித உரிமை ஆணைக்குழுவில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் முறைப்பாடு



மின்சாரத் தடை நேரத்தில் ஆயுதத்துடன் வந்த சீருடையினர், என்னை விசாரிப்பதாகக் கூறி விரட்டி உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் சாமுவேல் சந்திரசேகரம்ராஜன் முறைப்பாடு தெரிவித்துள்ளார்..

கல்முனைமனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஏ.சி. அப்துல் அசீஸிடம் அவரது முறைப்பாட்டை நேற்றுக் கையளித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## போதைப்பொருள் விற்பனை: .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2 ஆயிரத்து 880 மில்லிகிராம் ஹெரோய்ன், 560 மில்லிகிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 29 - 45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன், அவர்கள் நாவலப்பிட்டி, ஒவிட்ட, ஆகரஓயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தேகநபர்கள் நாவலப்பிட்டிபதில் நீதிவான் சுனெத்ரா கொட்டவலகெதர முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## தொழிலாளர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சமாதானம் சகவாழ்வு மற்றும் சுய நிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான பயணம் எனும் தொனிப்பொருளில் அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் தெற்கு என இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தக் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கவுள்ளனர்.

## அமைச்சர் பிரசன்னவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையொப்ப மிட்டமை தொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றவாளி என நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

மேலும், மனுதாரருக்கு 2 கோடி 50 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மற்றைய அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் பிரதிவாதி விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, ஏனைய பிரதிவாதிகளை அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## ஆயுதத்துடன் வந்தவர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 2ஆம் திகதி இரவு மின்தடை நேரம் பெரிய நீலாவணையிலுள்ள எனது வீட்டுக்கு வந்த ஆயுதம் தரித்த நான்கு இராணுவத்தினரும், தங்களைக் கொழும்பு புலனாய்வுப் பிரிவினர் என்று அடையாளப்படுத்திய இருவரும் விசாரிக்க வந்ததாகக் கூறினர்.

கொழும்பிலிருந்து வந்த புலனாய்வுப் பிரிவினர் என்பதால் அவர்களிடம் அடையாள அட்டையைக் கேட்டேன். ஆனால், அவர்கள் தர மறுத்தனர் .

நான் கல்முனையில் உண்ணாவிரத மிருந்தமை தொடக்கம் கடந்த மாதம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வரை நான் சம்பந்தப்பட்ட விடயங்களில் என்னை துருவித்துருவி விசாரித்தனர்.

இறுதியில் வெளியில் நடமாடக்கூடாது என்று அச்சுறுத்தியதோடு எனக்கும் மனைவி, பிள்ளை மற்றும் மருமகனுக்கும் பயமுறுத்தி அச்சுறுத்தல் விடுத்துச் சென்றனர்.

இதற்கு முன்னும், 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போதும், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போதும், 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போதும் இனந்தெரியாத ஆயுதக் குழுக்கள், பொலிஸார், புலனாய்வுக் குழுவினர் எனத் தொடர்ச்சியாக அடுத்தடுத்து வந்து என்னை விரட்டினர். தற்போது மீண்டும் இந்த அச்சுறுத்தலை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் மனித உரிமையுடன் சுதந்திரமாக வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனக்கு வாக்களித்த மக்களுக்கு உதவ முடியாத நிலையில் உள்ளேன்.

சமூக சேவை செய்ய தடை ஏற்பட்டுள்ளது. உளவியல் ரீதியான தாக்கம் அதிகமாக உள்ளது. குடும்பத்தினரும் அச்சத்தில் உள்ளனர்.

எனது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் பயப்பீதியுடன் நடைபிணமாகக் குடும்பத்துடன் காலம் கடத்தி வருகின்றேன்.

இது தொடர்பாக எமது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசனிடமும் முறையிட்டுள்ளேன். இவர்களை அடையாளம் கண்டு எனக்கு நீதி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஈழத்தமிழர்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகத்தின் சிறப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்து வரும் உடல்நிலை மிகவும் மிகவும் மோசமடைந்துள்ளது. இந்நிலையில், அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் இதுவரையில் நிறைவேற்றப்படாதமை உண்மையில் ஏமாற்றத்தையும் மனவேதனையும் தருகின்றது.

இதனைக் கருத்தில்கொண்டு அவர்களை விடுவிப்பதற்கு தமிழக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப தாயகம் திரும்புவதற்கோ அல்லது தொடர்ந்தும் தமிழகத்தில் இருப்பதற்கோ உரிய ஏற்பாடுகளைத் தமிழக முதலமைச்சர் செய்ய வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை போர் காரணமாகவே இங்கிருந்து பலரும் வெளிநாடுகளுக்குச் சென்ற நிலையில், அவ்வாறு வருவர்களுக்கு அடைக்கலம் தருவதாகக் கூறிக்கொண்டே ஈழத்தமிழர்களை சிறப்பு முகாம்களில் அடைத்து வைத்திருப்பது என்பது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். ஆகவே, அவர்களை விடுவிப்பதற்குத் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் தமிழக முதலமைச்சர் உடனடியாகத் தலையிட்டு அவர்களின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார்.

## கோட்டாபய - 'மொட்டு' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமூலத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே குறித்த அவசர சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அமைச்சர் பிரசன்ன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெரார்ட் மெண்டிஸ் என்ற தொழிலதிபரை தொலைபேசியில் மிரட்டி அவரிடம் இருந்து 64 மில்லியன் ரூபா கேட்டார் என இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குற்றங்களை இழைத்தார் என அப்போதைய மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அவரது மனைவி மொரீன் ரணதுங்க மற்றும் நரேஷ் குமார் ஃபரீக் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் 15 குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்திருந்தார்.

## சிறிபால, அமரவீரவுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட கூட்டம் மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நடைபெற்றது.

நிமல் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர, ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, துமிந்த திஸாநாயக்க மற்றும் லசந்த அழகியவண்ண ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, கட்சியில் நாங்கள் வகித்த பதவி பறிக்கப்பட்டுவிட்டது என நீங்கள் அறிக்கை விடுத்துள்ளீர்கள். அப்படி அறிக்கை விடுத்து, எதற்காக சந்திப்புக்கு அழைக்க வேண்டும்? இனி நாங்கள் வரப்போவதில்லை என்று நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் குறிப்பிட்டனர்.

நான் அந்த அறிக்கையை விடுக்கவில்லை. கட்சியின் பொதுச்செயலாளர் தான் விடுத்துள்ளார். எது எவ்வாறு அமைந்தாலும், உங்கள் இருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

சர்வகட்சி அரசு என்ற யோசனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குரியது. எனவே, அதனை ஆதரித்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவதில் தவறில்லை என்று இதன்போது உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## நாட்டுக்காக 21ஐ ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹட்டனில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இன்று உச்சக்கட்டத்தில் உள்ளது. இந்நிலைமைக்கு ராஜபக்ச தரப்பே பொறுப்புக்கூற வேண்டும்.

ராஜபக்ஷ ஆட்சியில் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளால்தான் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துள்ளது. எரிபொருள் பிரச்சினைக்கு இன்னும் தீர்வில்லை. புதிய அரசு அமைந்த பிறகும்கூட வரிசைகள் தொடர்கின்றன.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. அதற்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி முழு ஆதரவையும் வழங்கும். எனினும், 21ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேறுவது மொட்டுக் கட்சியின் கைகளில்தான் தங்கியுள்ளது. ஏனெனில் அக்கட்சிக்குத்தான் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் உள்ளது.

21 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேறினால்தான் நாட்டில் ஜனநாயகம் மலரும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். 19ஐ இல்லாதொழித்து 20 ஐக் கொண்டு வந்ததால்தான் நாட்டுக்குச் சாபம் ஏற்பட்டது.

அதேவேளை, தமிழகத்தால் வழங்கப்பட்ட நிவாரணத்தில் அரசியல் நாடகம் அரங்கேற்றப்படக்கூடாது. மக்களுக்கு நியாயமான முறையில் நிவாரணம் பங்கிடப்பட வேண்டும்.

சஜித் பிரேமதாஸ பிரதமராகி இருந்தால்கூட நான் அமைச்சுப் பதவியை ஏற்றிருக்கமாட்டேன். மக்கள் ஆணையுடன் அமையும் அரசில்தான் அமைச்சுப் பதவியை ஏற்பேன். அதுவும் எமது மக்களுக்குச் சேவை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

தோட்டப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்கள் எமது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் மலையக மக்களுக்கும் நிவாரணம் அவசியம். அதற்கான வலியுறுத்தல் தொடரும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முதுகெலும்பில்லாத தலைமை

ரஷ்ய ஏரோபுளோட் விமானத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு இலங்கை நீதிமன்றம் ஒன்று கொடுத்த உத்தரவு ஒரு ராஜதந்திர சர்ச்சை அல்ல. வணிகப் பிரச்சினை. இரு நிறுவனங்களுக்கும் இடையிலான வர்த்தகப் பிணக்கு. அதை ராஜதந்திர சர்ச்சையாக்கித் தனது தலையில் தூக்கிப் போடக் கொழும்பு ஏன் இடமளிக்கின்றது என்பது புரியவில்லை.

இது, விமானம் ஒன்றைக் குத்தகைக்கு விட்ட நிறுவனத்துக்கும் குத்தகைக்குப் பெற்ற நிறுவனத்துக்கும் இடையிலான வர்த்தக சர்ச்சை. குத்தகைக்கு வழங்கிய நிறுவனம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டரீதியாக நிவாரணம் கேட்டு, நீதி முறையாக வழக்கு தாக்கல் செய்தது. நீதிமன்றம் வழக்கை விசாரித்து இடைக்கால உத்தரவு கொடுத்திருக்கின்றது.

வர்த்தக ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டிய விவகாரம் இது. இதில் இலங்கை நீதித்துறையின் தனித்துவ சுயாதிபத்தியத்தில் ரஷ்ய அரசு முறையற்ற விதத்தில் தலையீடும் அழுத்தமும் செய்ய முனைவது தப்பு.

அதற்கு இலங்கை அரசு இடமளித்துத் துணைபோய், இதனை ராஜதந்திர விவகாரம் என அர்த்தம் பண்ணி, தனது நீதித்துறை மீது முறைகேடாக அழுத்தம் பிரயோகித்து, தன்னுடைய நாட்டின் நீதித்துறையைக் கேவலமாக்க முற்படக்கூடாது.

அந்த ஏர்பஸ் ஏ330 ரக விமானத்தைக் குத்தகைக்கு எடுத்தது ரஷ்ய அரசின் ஏரோபுளொட் நிறுவனம். அயர்லாந்தைச் சேர்ந்த செலஸ்ட்ரியல் ஏவியேன் ரேடிங் லிமிடெட் என்ற நிறுவனம் அதை குத்தகைக்கு வழங்கி இருந்தது.

குத்தகைப் பணத்தை ஒழுங்காகச் செலுத்தாதமையை ஒட்டி சம்பந்தப்பட்ட அயர்லாந்து நிறுவனம் வழக்குத் தொடர்ந்து இருக்கின்றது.

இவ்வாறு இரு வர்த்தக நிறுவனங்களுக்கு இடையிலான சர்வதேசக் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் குத்தகைப் பொருள் இலங்கையில் இருக்கின்ற சமயத்தில் இலங்கை நீதித்துறைக்கும் இத்தகைய விவகாரத்தில் நியாயாதிக்கம் உண்டு.

கப்பல் துறையில் கப்பல் நிறுவனங்கள் பல சமயங்களில் ஊழியர்களுக்கு சரியான சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதில்லை. அதனால் பாதிக்கப்படும் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட கப்பல் தரிக்கும் துறைமுகப் பிரதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடருவர். அத்தகைய சமயங்களில் துறைமுகத்தை விட்டுக் கப்பல் வெளியேற அனுமதிக்கக் கூடாது என நீதிமன்றங்கள் இடைக்கால தடை விதிப்பது வழமை. வருடம்தோறும் இத்தகைய பல நூறு இடைக்கால உத்தரவுகள் உலக நாடுகளின் நீதிமன்றங்களில் வழங்கப்படுகின்றன.

அவை வர்த்தக நிறுவனங்களுக்கு இடையிலான வணிகச் சர்ச்சைகள். வியாபாரப் பிணக்குகள்.

அவை, சம்பந்தப்பட்ட வழக்காளிகளுக்கும் வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத்துக்கும் உட்பட்ட சட்டப் பிரச்சினை. அதைத் தேசங்களுக்கு இடையிலான பிரச்சினையாக்கக் கூடாது; பிரச்சினையாக்க முடியாது.

ரஷ்ய ஏரோபுளோட் விடயத்தில் அந்த உறுதிப்பாட்டை – நாட்டின் தனித்துவத்தை – கொழும்பு நிலைநிறுத்த வேண்டும். வணிகப் பிரச்சினையை – முரண்பாட்டை – நீதிமன்றத்தில், நீதி முறையாகத் தீர்க்க கொள்ளுங்கள், பின்கதவால் ராஜதந்திர அழுத்தம் கொடுத்து, இலங்கையில் சட்டத்தின் ஆட்சியில் குழப்பத்தைத் தூண்டாதீர்கள் பதிலை தெளிவாகவும் உறுதியாகவும் ரஷ்யாவுக்கு கொழும்பு எடுத்துரைக்க வேண்டிய நேரம் இது.

அதைவிடுத்து, ரஷ்ய அழுத்தத்துக்கு முறையற்ற விதத்தில் பணிந்து, சட்டமா அதிபர் மூலம் இதிலும் சட்டத் திருகுதாளம் பண்ண கோட்டா – ரணில் கூட்டணி அரசு முயற்சிப்பதாகத் தோன்றுகின்றது. அப்படிச் செய்வது இலங்கை சுயாதிபத்தியமும் இறைமையும் உள்ள சுதந்திர நாடு என்ற உரித்தை நிலைநிறுத்தும் தைரியமில்லாத – முதுகெலும்பில்லாத – கோழை அரசியல் தலைவர்களின் செயற்போக்காகவே அமையும்.

## அரசமைப்புத் திருத்தம் பொதுமக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாது!

### நிமல் புஞ்சிஹேவா சுட்டிக்காட்டு



அரசமைப்பின் உத்தேச 21 ஆவது திருத்தச் சட்டம் தற்போது நிறைவேற்றப்படுவதால் பொதுமக்களின் எந்தவொரு அபிலாஷை–யையும் பூர்த்தி செய்யாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ள அவர் –

முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்புத் திருத்தச் சட்டம் பொதுமக்களின் எந்தவொரு அபிலாஷையையும் பூர்த்தி செய்யக்கூடியதல்ல.

தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு புதிய அரசாங்கமொன்று அமைந்த பின்னர் அரசமைப்பு முழுமையாகத் திருத்தப்பட்டு புதிய யாப்பு உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் பொதுமக்களின் அபிலாஷைகள் பூர்த்திசெய்யப்படும்.

ஆனாலும் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு 1,000 கோடி ரூபாவுக்கும் மேலதிகமான தொகை செலவிடப்பட வேண்டியிருக்கும். நாடு தற்போதைக்கு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையில் அது சாத்தியப்படாது.

எனவே தற்போதைக்கு அடுத்த தேர்தலின் மூலம் பெண்கள், இளைஞர்கள் போன்றோரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான வழிகளை மேற்கொள்ளுமாறு சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

மேலும் அடுத்த தேர்தலின் பின் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் சட்டத்தரணி புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வினைத்திறனற்ற விநியோக திட்டம்

### தொழிற்சங்கங்கள் கண்டிப்பு

நாட்டில் முறையற்ற எரிபொருள் விநியோகம் காரணமாக பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வினைத்திறனற்ற விநியோக வேலைத் திட்டம் காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய மண்ணெண்ணெய் தமது கையிருப்பில் இல்லை என்றும் ஆனந்த பாலித தெரிவித்தார்.

கையிருப்பில் உள்ள மண்ணெண்ணெய்யை விநியோகிக்க பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கவில்லை என ஆனந்த பாலித குற்றம் சுமத்தினார்.

மேலும் லஞ்சம் மற்றும் கமிஷன் அடிப்படையில் எரிபொருள் இருப்புக்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்குகின்றது என அவர் குற்றம் சாட்டினார்.

## கடனை திருப்பிச் செலுத்துவதற்கு 500 கோடி டொலர் வேண்டும்!



### என்கின்றார் ரணில்

இந்த வருடத்தில் கடன் மீள் செலுத்துகைக்காக அரசாங்கம் 500 கோடி அமெரிக்க டொலர்களை எதிர்பார்ப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு வெளிநாட்டுக் கையிருப்பை வலுப்படுத்துவதற்காக மேலும் 100 கோடி டொலர்களை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

வர்த்தக சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கப்பட்டுவரும் கலந்துரையாடல்கள் இம்மாத இறுதியில் முடிவிற்குக் கொண்டுவரப்படும் என நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு நிதி மற்றும் சட்ட ஆலோசகர்கள் நியமனத்தைத் தொடர்ந்து கடன் மறுசீரமைப்பை முன்னிறுத்திய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

மேலும் நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக வெளிநாடுகளுடன் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன எனவும், ஜப்பானுடன் முறிவடைந்த நல்லுறவை மீண்டும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## சீமெந்து மூடை ஒன்றின் விலை 4 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும்!

எதிர்காலத்தில் சீமெந்து மூடை ஒன்றின் விலை 4 ஆயிரம் ரூபாவைத் தாண்டும் என தேசிய கட்டுமான சங்கம் தெரிவித்துள்ளது.

வரி அதிகரிப்புடன் சீமெந்து விலையும் அதிகரிக்கும் என அச்சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சீமெந்து மூடை ஒன்றின் விலை 3 ஆயிரம் ரூபாவை அண்மித்துள்ளதாகவும் தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார். இந்நிலையில் வரி அதிகரிப்பால் சீமெந்து விலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

# நைஜீரியாவில் துப்பாக்கிச் சூடு 50 பேர் பரிதாபகரமாக சாவு

## பலர் மருத்துவமனையில் அனுமதி



நைஜீரியாவின் தேவாலயம் ஒன்றில் மர்ம நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு மற்றும் வெடிகுண்டு தாக்குதலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது. ஓண்டோ மாகாணத்தில் உள்ள ஒவோ என்ற இடத்தில் உள்ள தேவாலயத்தில் நேற்று பிரார்த்தனை நடைபெற்று கொண்டு இருந்தது. குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டோர் பிரார்த்தனை செய்து கொண்டு இருந்தனர். அப்போது திடீரென தேவாலயத்திற்குள் புகுந்த மர்ம நபர்கள் மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். சில கையெறி குண்டுகளும் வீசப்பட்டன.

துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுவெடிப்பில் சிக்கி நிகழ்விடத்திலேயே 22 பேர் உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த 70 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் சிகிச்சை பலனின்றி பலர் அடுத்தடுத்து உயிரிழந்தமையால் பலி எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது. கவலைக்கிடமான நிலையில் 20 பேர் சிகிச்சை பெற்று வருகின்றமையால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. பலியானவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள் மற்றும் பெண்கள் ஆவர். தாக்குதல் நடத்திய மர்ம நபர்கள் தேவாலயத்தின் பாதிரியாரை கடத்திச் சென்றுள்ளமையால் தாக்குதலுக்கு மத ரீதியிலான காரணம் உள்ளதா என ஓண்டோ மாகாண பொலிஸார் விசாரித்து வருகின்றனர். ஓண்டாமாகாணத்தில்சமீபகாலமாகவிவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக துப்பாக்கிச் சூடு நடந்ததா என்றும் அதிகாரிகள் விசாரணை செய்து வருகின்றனர்.

### வடகொரியாவுக்கு பதிலடி

## அமெரிக்காவுடன் தென்கொரியா எட்டு ஏவுகணை சோதனை



வடகொரியாவின் ஏவுகணை சோதனைக்கு பதிலடியாக அமெரிக்காவுடன் இணைந்து தென் கொரியா 8 ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு இருப்பது கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜப்பானில் கடந்த 10 நாள்களுக்கு முன்பு குவாட் உச்சி மாநாடு நடந்தபோது, சீன மற்றும் ரஷ்ய போர் விமானங்கள் ஜப்பான் கடல் பகுதியில் பறந்தது பரபரப்பை ஏற்படுத்தின. இதையடுத்து, ஜப்பானும், அமெரிக்காவும் கூட்டு ராணுவ பயிற்சியில் ஈடுபட்டன. அடுத்த சில மணி நேரங்களில் வடகொரியா ஜப்பானை நோக்கி ஏவுகணையை வீசி சோதனை நடத்தியது. இதனால், வடகொரியா மீது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக கடந்த வாரம் அமெரிக்கா எச்சரித்தது.

இந்நிலையில், அமெரிக்காவின் விமானம் தாங்கி கப்பலான ரொனால்ட் ரீகன், தென் கொரியாவுடன் பிலிப்பைன்ஸ் கடலில் மூன்று நாள் போர் பயிற்சி நடத்தியது. நேற்று முன்தினம் முடிந்தது. அதற்கு மறுநாளான நேற்றே, அமெரிக்காவுக்கு சவால் விடும் வகையில் ஒரே நாளில் 8 விதமான குறுகிய தூர கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை ஏவி, வடகொரியா சோதனை நடத்தி உள்ளது. வடகொரியா தலைநகர் பியோங்யாங்கிற்கு அருகிலுள்ள சுனான் பகுதியில் இருந்து, 35 நிமிடங்களுக்கு அடுத்தடுத்து இந்த 8 ஏவுகணைகளும் வீசப்பட்டன. இதை தென் கொரியாவும், ஜப்பானும் உறுதி செய்துள்ளன. வட கொரியாவின் இச்செயலுக்கு அமெரிக்கா வழக்கம் போல் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்தாண்டில் இதுவரை 18ஆவது முறை வடகொரியா ஏவுகணைகளை சோதித்துள்ளது.

இந்த நிலையில் வடகொரியாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், இன்று அதிகாலை தென் கொரியா அமெரிக்காவின் உதவியுடன் கிழக்கு கடற்கரையில் இருந்து அடுத்தடுத்து 8 ஏவுகணைகளை ஏவி சோதனை செய்ததாக தென் கொரிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. வடகொரியாவும் தென் கொரியாவும் போட்டிப்போட்டுகொண்டுநவீனஏவுகணைகளை பரிசோதித்து வருவது கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

### வங்கதேசத்தில்

## கன்டெய்னர் கிடங்கில் தீ 49 பேர் பரிதாபகரமாக சாவு




வங்கதேசத்தில் கப்பல் கன்டெய்னர் கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 49 பேர் உயிரிழந்தனர். 450க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.வங்கதேசத்தின் சிட்டகாங்கில் கடம்ரசூல் பகுதியில், 'பிஎம் கன்டெய்னர்' என்ற பெயரில் கிடங்கு உள்ளது. நேற்று முன்தினம் இரவு இங்கு திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தகவல் அறிந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது, ஒரு கன்டெய்னகர் பயங்கரமாக வெடித்து சிதறியது. இதனைத் தொடர்ந்து, தீ இன்னும் வேகமாக பரவத் தொடங்கியது. இதனால், அருகில் உள்ள வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தன.

இந்ததீவிபத்தில்இதுவரை 49 பேர் கருகி பலியாகி உள்ளனர். 450க்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர். சிட்டகாங், சட்டகிராம் உள்ளிட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அவர்கள் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும்என்றுஅஞ்சப்படுகிறது. இச்சம்பவம்குறித்துவேதனை தெரிவித்த பிரதமர் ஷேக் ஹசீனா, விபத்து நடந்த பகுதியில் உடனடியாக நிவாரண முகாம்களை அமைத்து, மக்களுக்கு தேவையான உதவிகளை செய்யும்படி உத்தரவிட்டுள்ளார். தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. அது பற்றி தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# பிறந்தநாள் விழாவில் புகுந்தது கொரோனா 55 நடிகர்,நடிகைகளுக்கு தொற்று உறுதி

பிரபல திரைப்பட தயாரிப்பாளரின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பங்கேற்ற 55 பிரபல நடிகர், நடிகைகளுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதாக யான தகவலால் பொலிவுட்டில் திடீர் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பொலிவுட் தயாரிப்பாளரும், இயக்குநருமான கரண் ஜோஹர் சமீபத்தில் தனது 50ஆவது பிறந்தநாளை கொண்டாடினார்.

இதையொட்டி அவர் பிரமாண்டமான விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். இதில் சினிமா மற்றும் டி.வி. துறையைச் சேர்ந்த பலர் பங்கேற்றனர். மும்பை அந்தேரி மேற்கு பகுதியில் நடந்த விருந்தில் பொலிவுட் நடிகர்கள் ஹ்ரித்திக் ரோஷன், ஷாருக்கான், கேத்ரினா கைப், கியாரா அத்வானி, ஜான்வி கபூர், மலைகா அரோரா, கரீனா கபூர் போன்றோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், கரண் ஜோஹரின் பிரமாண்ட விருந்தில் விருந்தினர்களாக பங்கேற்ற 50 முதல் 55 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால், அவர்கள் தங்களுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டிருப்பதை வெளியே சொல்லவில்லை என்று கூறப்படுகிறது. நடிகர் கார்த்திக் ஆர்யனுடன் இணைந்து நடிக்கும் நடிகை மூலம் தொற்று பரவியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. கடந்த சில நாள்களுக்கு முன்பு நடிகர் அக்ஷய் குமார் தனக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பதால், அபுதாபியில்நடக்கும்ஐஐஎவ்ஏ2022 நிகழ்ச்சியில் பங்கேற்கவில்லை என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்த நடிகர் ஷாருக்கானுக்கு கொரோனாத் தொற்று பரிசோதனை செய்யப்பட்டது.

இதில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், நடிகை கத்ரினா கைப், நடிகர் கார்த்திக் ஆர்யன் ஆகியோருக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 60 லட்சம் ரெம்டெசிவர் மருந்துக் குப்பிகள் காலாவதித் திகதியை நெருங்கியுள்ளனவாம்




கொரோனாத் தொற்றால் தீவிரமாக பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் ரெம்டெசிவர் மருந்து முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தொற்று உச்சத்தில் இருந்தபோது இந்தியா முழுவதும் ரெம்டெசிவர் மருந்துக்கு கடும் தட்டுப்பாடுஏற்பட்டது. அப்போதுசென்னையில் உள்ள சில அரசு மருத்துவமனை மருந்தகங்களில் மட்டுமே ரெம்டெசிவர் மருந்து விற்பனை செய்யப்பட்டது. இதை நீண்ட வரிசையில் காத்திருந்து நோயாளிகளின் உறவினர்கள் வாங்கிச்சென்றனர்.

மருத்துவர்கள் பரிந்துரை செய்தவர்களுக்கு மட்டுமே ரெம்டெசிவர் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. அதுவும் ஒவ்வொருவருக்கும் குறைந்த அளவிலே வழங்கும் வகையில் கட்டுப்பாடுகளும் இருந்தன. அப்போது கொரோனாத் தொற்று அதிக அளவில் காணப்பட்டதால் ரெம்டெசிவர் மருந்தின் தேவையும் அதிகமாக இருந்தது. இதனால் அந்த மருந்து அதிக அளவில் தயாரிக்கப்பட்டது. இந்த நிலையில் அடுத்த சில மாதங்களில் இந்தியாவிலும், உலக அளவிலும் கொரோனா பாதிப்பு குறைந்தது. இதனால் ரெம்டெசிவர் மருந்து குப்பிகள் தேக்கம் அடைந்தன. இந்தியாவில் தற்போது 60 லட்சம் ரெம்டெசிவர் மருந்து குப்பிகள் காலாவதியாகும் காலத்தை நெருங்கி விட்டன.

ரெம்டெசிவர் மருந்து மட்டுமன்றி கொரோனா சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்ட பல்வேறு மருந்துகளும் காலாவதியாகும் நிலையில் உள்ளன. ரெம்டெசிவர் 60 லட்சம் குப்பிகள் உள்பட கொரோனா மருந்துகள் காலாவதியாவதால் ஒட்டுமொத்தமாக 1,000 கோடி ரூபா இழப்பு ஏற்படும் என்று மருந்து உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கேரளாவை மிரட்டும் புதிய வகை நோரோ வைரஸ் குடிநீர் மூலம் பரவுவதாக சுகாதாரத்துறை எச்சரிக்கை

கேரளாவில் கடந்த முதலாம் திகதி பாடசாலைகள் திறக்கப்பட்டதையடுத்து திருவனந்தபுரத்தை அடுத்த விழிஞம் பகுதியில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் வழங்கப்பட்ட மதிய உணவை உண்ட மாணவர்கள் சிலருக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டது. உடனடியாக அவர்கள் அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு அவர்களை பரிசோதித்த டாக்டர்கள், சிறுவர்களின் இரத்த மாதிரியை பரிசோதனைக்கு அனுப்பினர். பரிசோதனை முடிவில் 2 மாணவர்களுக்கு புதிய வகை நோரோ வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. இதையடுத்து மாணவர்கள் இருவரும் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

கேரளாவில் ஏற்கனவே பறவை காய்ச்சல், பன்றி காய்ச்சல் என நோய்கள் பரவி வந்த நிலையில் இப்போது புதிய வகை நோரோ வைரஸ்பரவி இருப்பதுசுகாதாரத்துறையினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

நோரோ வைரஸ் பாதித்தவர்களுக்கு வாந்தி மயக்கம், தலைவலி, காய்ச்சல், அடி வயிற்றில் வீக்கம் போன்றவை ஏற்படும். வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு அதிகமானால் நீரிழப்பு ஏற்படும். இதனால் உடல் பலவீனம் அடைந்து நோய் பாதிப்பு அதிகரிக்கும். நோரோ வைரஸ் பாதிப்புக்கு ஆளானவர்களிடம் தொடர்பில் இருப்போருக்கும் இந்த நோய் பரவ வாய்ப்பு உள்ளதென்றும் நோயாளிகளின் வாந்தி மற்றும் அவர்களின் உமிழ் நீர் மூலமும் நோய் பரவ வாய்ப்பு உள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நோரோ வைரஸ் பாதிப்பை தடுக்க சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். குறிப்பாக சுத்தமான தண்ணீரை நன்றாக காய்ச்சி குடிக்க வேண்டும். கிணறுகள் மற்றும் தொட்டிகளை பிளீச்சிங் பவுடர் மூலம் சுத்தம் செய்து பயன்படுத்த வேண்டும். பழங்கள், காய்கறிகளை நன்கு கழுவிய பின்பே பயன்படுத்த வேண்டும். கைகளை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.

கேரளாவில் தற்போது பரவி வரும் புதிய வகை நோரோ வைரஸ் குழந்தைகளை அதிகம் பாதிக்கும் என்று கூறப்பட்டுள்ளது. தற்போது மேலும் 5 மாணவர்களுக்கும் உடல் நலக்குறைவு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் ரத்த மாதிரிகளும்பரிசோதனைக்குஅனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் வந்த பிறகே இவர்களுக்கும் நோரோ வைரஸ் பாதிப்பு உள்ளதா? என்பது தெரியவரும்.



## ஊழலைத் தட்டிக்கேட்கும் ஒரே கட்சி பா.ஜனதா கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை உரை

நெல்லை மாவட்டம் கூடங்குளம் அருகே உள்ள செட்டிகுளம் பண்ணையூரில் மத்திய பா.ஜனதா அரசின் 8 ஆண்டு கால சாதனை விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாநில தலைவர் அண்ணாமலைக்கு பூரண கும்ப மரியாதையும், யானையைவைத்துமாலையும் அணிவித்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.


தமிழகத்தில் குடும்ப ஆட்சியை ஒழித்து ஒரு பொதுவான மக்களுக்கான ஆட்சியை கொண்டுவர வேண்டும். கண்ணுக்குத் தெரியாத காற்றில் கூட ஊழல் செய்வதில் சிறந்த கட்சி தி.மு.க. குறிப்பாக கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கக்கூடிய நியூட்ரின் ஹெல்த் மிக்சில் ஊழல் நடைபெற்றுள்ளது. இதனை தொடர்ந்து மின்சாரதொகுப்பில் ஊழல், பொங்கல் தொகுப்பு வழங்கியதில் ஊழல் உள்பட பல ஊழல்களை தி.மு.க. செய்துள்ளது. அந்த ஊழல்களை தட்டிக்கேட்கும் ஒரே கட்சியாக பா.ஜனதா விளங்குகிறது.

கூடங்குளத்தில் அமைந்துள்ள அணுமின் நிலையத்தில் உள்ளூர் மக்களுக்கும் அதற்கு இடம் கொடுத்த நபர்களுக்கும் அதன் பக்கத்தில் குடியிருக்கும் மக்களுக்கும் மட்டுமே வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். தமிழகத்திற்கு 11 மருத்துவக்கல்லூரிகள், ஒரு எய்ம்ஸ் மருத்துவமனையை மத்திய அரசு கொடுத்துள்ளது. வங்கி கணக்குகள் இல்லாத 45 கோடி மக்களுக்கு கணக்குகளை உருவாக்கி கொடுத்துள்ளது.

தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 5 கோடி கழிவறைகள் மட்டுமே இருந்தன. மோடி அரசின் 8 ஆண்டு ஆட்சி காலத்தில்11கோடிகழிப்பறைகள் கட்டப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. முந்தைய ஆட்சியை விட இந்தியா முழுவதும் 9 கோடி நபர்களுக்கு எரிவாயு இணைப்பை மத்திய அரசு வழங்கியுள்ளது.

அம்பேத்கர், பட்டியலின சமுதாய மக்களை உயர்த்த வேண்டும் என்று எண்ணினார். ஆனால்மோடிபட்டியலினத்தை சேர்ந்த ஒருவரை குடியரசு தலைவராகவே உயர்த்தி அழகு பார்த்துள்ளார். உலக நாடுகளைவிட டிஜிற்றல் பண பரிவர்த்தனையில்முன்னணிநாடாக இந்தியா உயர்ந்து இருப்பது நமக்கு கிடைத்த பெருமை, என்று அங்கு உரையாற்றிய அண்ணாமலை தெரிவித்தார்.

## ரூபா தாள்களில் தாகூர், அப்துல் கலாம் படங்கள்; இந்திய ரிசர்வ் வங்கி பரிசீலனை செய்து வருகிறது




இந்தியாவில் புழக்கத்திலுள்ள ரூபாய் நோட்டுகளில் தற்போது மகாத்மா காந்தி படம் மட்டுமே இடம் பெறுவது வழக்கமாக உள்ளது. இந்த நிலையில் முதல் முறையாக இந்தியாவின் ஏனைய முக்கிய தலைவர்களின் படங்களையும் ரூபாய் நோட்டுகளில் இடம் பெற செய்வதற்கான பரிசீலனை நடந்து வருகிறது. ரூபாய் நோட்டுகளில் வழக்கமான இடத்தில் மகாத்மா காந்தியின் படமும் இருக்கும் அதே வேளை வோட்டர் மார்க் எனப்படும் மறைவாக தெரியும் வகையிலும் மகாத்மா காந்தியின் படம் கூடுதலாக இடம்பெறுகிறது. இப்போது அந்த இடத்தில் வங்க கவிஞர் ரவீந்திரநாத் தாகூர், முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் ஆகியோரின் படங்களை வெளியிட ரிசர்வ் வங்கி பரிசீலனை செய்து வருகிறது. ரிசர்வ் வங்கி மற்றும் நிதி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்திய பாதுகாப்பு அச்சகம் மற்றும் நாணய வெளியீட்டு அமைப்பு ஆகியவை இணைந்து மகாத்மா காந்தி, ரவீந்திரநாத் தாகூர், அப்துல் கலாம் ஆகியோரின் தலா 2 'வோட்டர்மார்க்' படங்களை அவற்றை பேரிசோதிப்பதற்குப் பொறுபான டெல்லி ஐ.ஐ.டி. பேராசிரியர் திலீப் டி.சகானிக்கு அனுப்பியுள்ளன. வோட்டர் மார்க் படங்களை சிறப்பாக தேர்வு செய்து இறுதி ஒப்புதலுக்கு அரசுக்கு அவர் அனுப்பிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியாவை சீர்திருத்தங்கள் மூலம் வலுப்படுத்த முயற்சிக்கிறாராம் மோடி

உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்ற மாநில முதலீட்டாளர்களுக்கான உச்சி மாநாட்டின் தொடக்க விழாவில் இந்தியப் பிரதமர் மோடி கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

ஒரு நாடு- ஒரே வரி, ஒரு நாடு-ஒரே மின்கட்டமைப்பு, ஒரு நாடு -ஒரே மொபிலிட்டி கார்ட், ஒரு நாடு-ஒரே ரேன் கார்ட் ஆகிய முயற்சிகள் அனைத்தும் எங்களின் திடமான மற்றும் தெளிவான கொள்கைகளின் பிரதிபலிப்பு. சமீபத்தில் நாங்கள் 8 வருட ஆட்சியை நிறைவு செய்துள்ளோம். சீர்திருத்தங்கள் மூலம் இந்தியாவை ஒரு தேசமாக வலுப்படுத்த நாங்கள் உழைத்து வருகிறோம்.

இந்த ஆண்டுகளில், சீர்திருத்தம், செயல்திறன், மாற்றம் என்ற மந்திரத்தில் நாங்கள் நாட்டை முன்னேற்றி உள்ளோம். கொள்கை ஸ்திரத்தன்மை, ஒருங்கிணைப்பு மற்றும் எளிதான வணிகம் செய்வதில் கவனம் செலுத்தி வருகிறோம். இன்று உலகம் இந்தியாவின் செயல்திறனைப் பாராட்டுகிறது. ஜி20 நாடுகளின் பொருளாதாரத்தில் நாம் வேகமாக வளர்ந்து வருகிறோம். உலக சில்லறை வர்த்தக குறியீட்டில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. 21ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் வளர்ச்சிக்கு உத்தரப் பிரதேசம்தான் உத்வேகத்தைக் கொடுக்கும் என்று நான் நம்புகிறேன். அடுத்த 10 ஆண்டுகளில் உத்தரப் பிரதேசம் இந்தியாவுக்கு மிகப்பெரிய உந்து சக்தியாக இருக்கும். இன்று 80,000 கோடி ரூபாவுக்கு மேல் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தங்கள் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த சாதனை முதலீடு ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும். உத்தர பிரதேசத்தில் உள்ள இளைஞர்கள் இதனால் அதிக பயன் பெறுவார்கள், என்று தனது உரையில் பிரதமர் மோடி தெரிவித்திருக்கிறார்.





# மூன்று பாலர் பாடசாலைகளுக்கு கந்தளாயில் குடிதண்ணீர் வசதி

(எவ்.முபாரக்)

அல்ஹிக்மத்துல் உம்மா பவுண்டேஷனினால் கந்தளாயில் அமைந்துள்ள மூன்று பாலர் பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வசதி பெற்றுக்கொடுக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்றது. அல்ஹிக்மத்துல் உம்மா பவுண்டேஷனின் தலைவரும் சமூக சேவையாளருமான கஸ்ஸாலி முகமட் பாத்திஹ் இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். விசேட அதிதியாக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளரான ஆசிரியர் ஏ.எல்.முகமட் நபீல் கலந்துகொண்டார். பாலர் பாடசாலைகளான பாத்திமா பாலர் பாடசாலை, அஸ்ஸபா பாலர் பாடசாலை, ஆயிஷா பாலர் பாடசாலை ஆகியவற்றுக்கே இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டது.

# செவிப்புலனற்றோருக்காக விசேடமாக தலைமைத்துவப் பயிற்சிச் செயலமர்வு




(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு செவிப்புலன் வலுவற்றோர் நிறுவனமும், சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்திய தலைமைத்துவப் பயிற்சிச் செயலமர்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாநகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

செவிப்புலன் வலுவற்றோர் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் பூ.கஜாதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவனும், சிறப்பு அதிதியாக மாநகரசபை பிரதி முதல்வர் தி.சத்தியசீலனும் கலந்து கொண்டனர். இச்செயலமர்வின் வளவாளராகக் கலந்து கொண்ட தமிழ் சைகை மொழியின் பணிப்பாளர் எஸ்.செல்வகுமாரால் வாழ்க்கைத்திறன் தலைமைத்துவப் பயிற்சி மிக எளிய முறையில் முன்னெடுக்கப்பட்டது.

கலந்து கொண்ட பயிற்சியாளர்களுக்கு செயலமர்வின் நிறைவில் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# அம்பாறை வன்முறைகள்; இதுவரை 33 பேர் கைது

கடந்த மே 9 ஆம் திகதியைத் தொடர்ந்து அம்பாறையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் மற்றும் நகரசபை முதல்வர், அவர்களது உறவினர்களது வீடுகளை தீயிட்ட மற்றும் சேதமாக்கிய சம்பவம் தொடர்பாக, பெண்கள் மற்றும் நீதிமன்றில் சரணடைந்த இருவர் உட்பட 33 பேர் இதுவரை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் விசேட விசாரணைக் குழுவின் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் பி.பிரகலாதன் தெரிவித்தார்.

இந்த வன்முறைகளின் போது, அம்பாறையிலுள்ள ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான வீரசிங்க, விமல திஸாநாயக்கா மற்றும் அவரது மகனின் வீடு, அம்பாறை நகரசபை முதல்வர் ஆகியோரது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விசேட பொலிஸ் குழுவினை சப் இன்ஸ்பெக்டர் பி.பிரகலாதன் தலைமையில், அமைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கினர்.

இதனையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், பெண்கள் உட்பட 31 பேர் கைது செய்யப்பட்டனர். இருவர் நீதிமன்றில் சரணடைந்தனர்.

இதுவரைக் கைது செய்யப்பட்ட 33 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, அவர்கள் பிணையில் வெளிவந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் தீக்கிரையாக்கப்பட்ட மற்றும் சேதமாக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக விலை மதிப்பீட்டு திணைக்களத்துக்கு அறிவித்துள்ளமையுடன் மேலதிக விசாரணை நடைபெற்று வருகின்றது.

# கண்ணகையம்மனின் புகழ் பாடும் இறுவட்டு வெளியீடு!




(க.கிருபாகரன்)

மட்டக்களப்பில் புகழ்பெற்ற தாண்டவன்வெளி குளக்கட்டு கண்ணகையம்மன் ஆலய அலங்காரதிருச்சடங்கு உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, அடுத்தவாரம் செவ்வாய்க்கிழமை 14 ஆம் திருக்குளிர்த்தி பாடி அம்மன் உற்சவம் நிறைவு பெறவுள்ளது.

பூம்புகார், ஏரன்ஸ் வீதி, வாழ் மக்களால் இரண்டாம் நாள் சடங்கு உற்சவத்தினை சிறப்பிக்கும் முகமாக கடந்த சனிக்கிழமை இரவு பூசைகள் இடம்பெற்றன.

இதன்போது, குழந்தையடி பிள்ளையார் ஆலய கட்டட நிதிக்காக மங்கையக்கரசி குடும்பத்தினரின் அனுசரணையில் 'கண்ணகை புகழ் பாடுவோம்' எனும் பக்தி பாடல் அடங்கிய இறுவட்டு வெளியீடு செய்யப்பட்டது. இவ் இறுவட்டு வெளியீட்டு விழாவில் ஆலய பிரதம குரு சிதம்பரசாந்த ரூபக் குருக்கள், ஆலய பிரதம பூசகர் சித்திரவேல் ஐயா மற்றும் ஆலய நிர்வாகத்தினர், மங்கையக்கரசி அம்மையாரின் குடும்ப சந்ததியினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கண்ணகை அம்பாளின் தீ மிதிப்பு உற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தாண்டவன்வெளி வாழ் மக்களின் பத்தாம் நாள் சடங்கு உற்சவ தினத்தன்று இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பத்து சக்கர நாற்காலிகள் கந்தளாயில் வழங்கிவைப்பு




திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற வலது குறைந்தோருக்கு சக்கர நாற்காலிகள் அல்ஹிக்மா பவுண்டேஷன் அமைப்பினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. கந்தளாய் பிரதேசசபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிர் அவர்களின் ஏற்பாட்டில், சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு கந்தளாய் நடு ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது, பேராறு பகுதியில் உள்ள பத்து பேருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், அல்ஹிக்மா பவுண்டேஷன் அமைப்பின் பணிப்பாளர் எம்.ஏ.இபாதத்துல்லாஹ் (மௌலவி), கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிர், பள்ளிவாயல் நிர்வாகிகள் மற்றும் ஊனமுற்ற பொது மக்களும் கலந்து கொண்டார்கள்.

# இந்தியா இலங்கைக்கு வழங்கும் உரம் இன்னும் சில நாள்களில் வந்தடையும்!

## இந்திய உயர்ஸ்தானிகர் உறுதியளிப்பு

இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள உரம் இன்னும் சில நாள்களில் இலங்கையை வந்தடையும் என்று இந்திய உயர்ஸ்தானிகர் உறுதியளித்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இந்தியா தனது உரத் தேவையை ஓமான் நாட்டிலிருந்தே பெற்றுக் கொள்வதாகவும், அந்த வகையில் இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளித்த உரம் ஓமான் நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டு கப்பல் மூலம் நேரடியாக இலங்கைக்கு வரவழைக்கப்படவுள்ளதாகவும், இன்னும் சில நாள்களில் அந்தக் கப்பல் இலங்கைக்கு வந்து சேரக்கூடும் என்றும் இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ள கால்நடை வளர்ப்பு தொழில்துறையை மேம்படுத்தவும் உதவிகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் சீதோஷ்ண நிலையைப் பொறுத்தமட்டில் சூரியகாந்தி பயிர்ச்செய்கைக்கு உகந்த சூழல் காணப்படுவதாகவும், சூரிய காந்தி எண்ணெய்க்குச் சர்வதேசச் சந்தையில் பெரும் கேள்வி இருப்பதால் அதனைப் பயிரிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இந்திய ஒத்தாசைகளைப் பெற்றுத் தருவது தொடர்பாகக் கவனம்செலுத்தப்படும்என்றும் இந்தியஉயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

# எத்தனை வேளைகள் சாப்பிட வேண்டுமென முடிவு செய்வதற்குப் பிரதமர் அவசியமில்லை!

## அநுரகுமார பதிலடி



சிறுபோக பயிர்ச்செய்கைக்கு உரிய நேரத்தில் இரசாயன பசளைகளை வழங்காது தம்பட்டம் அடிக்கும் கோட்டா – ரணில் இரட்டையர், எதிர்காலத்தில் ஏற்படப் போகும் உணவு நெருக்கடிக்கு வழங்கப் போகும் தீர்வு என்ன என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

குறிப்பாகஎதிர்காலத்தில்உணவுநெருக்கடி ஏற்படும்என்றகடும்அச்சத்திலும்உணர்விலும் பொதுமக்கள் இருக்கின்றனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி ஜனாதிபதி கமத்தொழில் தொடர்பாக எடுத்த தவறான முடிவுகள் காரணமாக உணவு பற்றாக்குறை ஏற்படும் நிலைமையை நாடு தற்போது எதிர்நோக்கி வருகிறது.

நெருக்கடிக்கு சரியான தீர்வைத் தேடி, உணவு உற்பத்திக்காக அரசாங்கம் வேலைத் திட்டத்தை முன்வைக்கத் தவறியுள்ளது. இதனால், அரசாங்கத்தில் இருக்கும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மீண்டும் வழமை போல் பொறுப்பற்றவகையில் பல்வேறு கதைகளைக் கூறி வருகின்றனர். இதன் மூலம் நாட்டுக்கு தொடர்ந்தும் அனர்த்தமே ஏற்படும். சிறு போக பயிர்ச்செய்கை ஆரம்பித்து குறிப்பிடத்தக்களவு காலம் கடந்துள்ளது. தேவையான இரசாயன பசளைகள், கிருமி நாசனிகள் இல்லை.

விவசாயத்துக்குத் தேவையான பசளை உள்ளிட்டவற்றை வழங்க நடவடிக்கை எடுக்காத அரசாங்கம் தேசிய சேதனப் பசளை உற்பத்தியாளர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட பசளைக்கான பணத்தையும் இது வரை செலுத்தவில்லை.

நாடு எதிர்நோக்கி இருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சரியான வேலைத் திட்டத்தை முன்வைக்க கோட்டா – ரணில் அரசாங்கம் தவறியுள்ளது. அத்துடன் இந்த பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எந்த உணர்வுமில்லை.

பயிரிட வேண்டாம் என ஜனாதிபதி கூறுகிறார். மரவள்ளிக் கிழங்கை பயிரிடுமாறு பிரதமர் கூறுகிறார். கமத்தொழில் அமைச்சர் காடுகளில் உள்ள பலாக்காய்களை சாப்பிடுமாறு கூறுகிறார்.

இதனிடையே நாம் சாப்பிட வேண்டிய உணவுகளையும், எத்தனை வேளை சாப்பிட வேண்டும் என்பது பற்றியும் பிரதமர் கூறுகிறார். நாம் தினமும் எத்தனை வேளை சாப்பிட வேண்டும் என்று முடிவு செய்ய நாட்டுக்கு பிரதமர் ஒருவர் தேவையில்லை எனவும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.



# பெண் தலைமைத்துவமுள்ள குடும்பத்துக்கு உலருணவு!

கனடாவில் வாழ்ந்துவரும் செல்வன் லோ.இந்துஜனின் அனுசரணையில் யாழ்.மாவட்டத்தில் பெண் தலைமைத்துவத்துடன் வறுமைநிலையில் உள்ள குடும்பத்துக்கு கடந்த சனிக்கிழமை உலருணவுப் பொதி வழங்கிவைக்கப்பட்டது.

சமூகசெயற்பாட்டாளர்கலாநிதிஅகிலன்முத்துக்குமாரசாமியால் ஒருவேளை உணவுக்காக அந்தரித்த குடும்பத்தினருக்கு அவர்களின் நிலையைக் கருத்திற்கொண்டு இந்த உலர் உணவுப் பொதி வழங்கிவைக்கப்பட்டது.

# ஜூன் 15 ஆம் திகதி தொடக்கம் போக்குவரத்து துறையில் மாற்றம்!

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு




ஜூன் 15ஆம் திகதி முதல் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்துக்காக கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் பொதுப் போக்குவரத்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் போக்குவரத்து அமைச்சர் மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிறுவனங்களின் தலைவர்களுக்கு இடையில் இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் சந்திப்பொன்று இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை அன்றாட நடவடிக்கைகளுக்கான போக்குவரத்து மற்றும் அலுவலக ரயில் மற்றும் பஸ் சேவைகள், பள்ளி மாணவர்களுக்கான போக்குவரத்து சேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் போன்றவையை சில நாள்களுக்குள் மேம்படுத்த பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

# ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசு மத்தியவங்கியின் சுயாதீனத்தை மதிக்கவேண்டும்!

## முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ.ஏ.விஜேவர்தன வலியுறுத்து



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும் என முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ.ஏ. விஜேவர்தன வலியுறுத்தி உள்ளார்.

மத்திய வங்கி மீதான எந்தவொரு தலையீடுகளும் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை வலுவிழக்கச் செய்துவிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலை தொடர்பாக ஆராயும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்றுக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

ஊழியர்களுக்கான கொடுப்பனவை இடையூறின்றி மேற்கொள்வதற்கு பில்லியன் கணக்கான ரூபாக்களை அச்சிடவேண்டும் என்று பிரதமர் வெளியிட்ட கருத்து பல்வேறு விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ. ஏ.விஜேவர்தன சுட்டிக் காட்டினார்.

மேலும் இந்த நடவடிக்கையானது நீரிழிவு நோயாளிக்கு சீனி அதிகளவில் உள்ள உணவை வழங்குவதைப் போன்ற ஒரு செயற்பாடு என்றும் அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

அத்தோடுமத்தியவங்கியின் மீதான அநாவசிய தலையீடுகள், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த தற்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.06.2022இல் வெளியிடப்பெற்றது.